eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 6 Special Issue: 02 December 2025
DOI: https://doi.org/10.63300/tm060225

# Lifestyle Practices in Kuruntokai: An Anthropological Perspective

**M. GOMATHI***
Ph.D. Research Scholar of Tamil, Reg. No.: PUAJ230360826,
Kandaswami Kandar's College, Namakkal, Affiliated to Periyar University
Tamil Nadu, India
ORCiD: https://orcid.org/0009-0000-1373-7202, EMail: gomathiambi1110@gmail.com

**Dr. C. SUBRAMANIYAM****
Associate Professor of Tamil, Kandaswami Kandar's College, Namakkal
Affiliated to Periyar University, Tamil Nadu, India
ORCID: https://orcid.org/0000-0002-9386-7.

## Abstract:

Sangam literature represents the classical literary heritage of Tamil, containing a thousand cultural treasures dating back two thousand years. Among the Ettuthogai anthology, Kuruntokai stands out as a unique work with verses ranging from four to eight lines, composed in Akapporul (interior themes) style. This research paper examines how Kuruntokai preserves and reflects the lifestyle practices of ancient Tamils through an anthropological lens. The study analyzes the domestic life of hero and heroine, hospitality customs, barter system practices, and various social values embedded in these ancient poems. Through systematic analysis of selected verses, this paper demonstrates that Kuruntokai serves as a comprehensive document of Tamil cultural practices, offering insights into marriage customs, family values, social obligations, and economic exchanges. The research employs textual analysis methodology to identify and interpret lifestyle patterns, revealing the sophisticated social structure and ethical framework that governed ancient Tamil society.

**Keywords:** *Kuruntokai, Lifestyle practices, Hospitality, Domestic life, Barter system, Tamil culture*.

**References:**

1. Kuruntokai. Edited by U.Ve. Saminathaiyar. Chennai: Kabir Press, 1955.
2. Tolkappiyam - Poruladhikaram. With Ilampuranar's Commentary. Chennai: University of Madras, 1965.
3. Purananuru. Edited by U.Ve. Saminathaiyar. Chennai: University of Madras, 1963.
4. Akananuru. Edited by U.Ve. Saminathaiyar. Chennai: University of Madras, 1965.
5. Natrinai. Edited by U.Ve. Saminathaiyar. Chennai: University of Madras, 1956.

**Acknowledgement**
This research paper is a part of my Ph.D. thesis. I express my gratitude to my Research Advisor, Dr. C. Subramanian, the administration of Kandasamy Kandar College, and Periyar University.
Conflict of Interest: There is no conflict of interest regarding this research paper.
Funding : No funding was received for this research.
**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# எடுத்துரைப்பியல் நோக்கில் குறுந்தொகையின் வாழ்வியல் முறை

*** மா கோமதி,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: PUAJ230360826, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, நாமக்கல், பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது, தமிழ்நாடு, இந்தியா

**** முனைவர் சி. சுப்ரமணியம், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை**

கந்தசாமிக் கண்டர் கல்லூரி, நாமக்கல், பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்ட்டது

தமிழ்நாடு, இந்தியா.

**சுருக்கம் (Abstract)**

சங்க இலக்கியம் செந்தமிழின் செவ்வியல் இலக்கியப் பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, இது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆயிரம் பண்பாட்டுக் களஞ்சியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களில், குறுந்தொகை நான்கு முதல் எட்டு அடிகள் வரை கொண்ட பாடல்களால் ஆன தனித்துவமான படைப்பாக விளங்குகிறது, இது அகப்பொருள் (உட்கருப்பொருள்) பாணியில் இயற்றப்பட்டது. இவ்வாய்வுக் கட்டுரை குறுந்தொகை பண்டைய தமிழர்களின் வாழ்வியல் முறைகளை எவ்வாறு பாதுகாத்து பிரதிபலிக்கிறது என்பதை எடுத்துரைப்பியல் நோக்கில் ஆராய்கிறது. இவ்வாய்வு தலைவன் தலைவியின் இல்லற வாழ்வு, விருந்தோம்பல் பழக்கவழக்கங்கள், பண்டமாற்று முறை நடைமுறைகள் மற்றும் இப்பண்டைய பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல்வேறு சமூக மதிப்புகளை பகுப்பாய்வு செய்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் முறையான பகுப்பாய்வின் வழியாக, குறுந்தொகை தமிழர் பண்பாட்டு நடைமுறைகளின் விரிவான ஆவணமாக செயல்படுகிறது என்பதை இக்கட்டுரை நிரூபிக்கிறது, இது திருமண பழக்கவழக்கங்கள், குடும்ப மதிப்புகள், சமூகக் கடமைகள் மற்றும் பொருளாதார பரிமாற்றங்கள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. வாழ்வியல் முறைகளை அடையாளம் காணவும் விளக்கவும் இவ்வாய்வு பாடல் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்துகிறது, இது பண்டைய தமிழ் சமூகத்தை ஆட்சி செய்த அதிநவீன சமூக அமைப்பு மற்றும் நெறிமுறை கட்டமைப்பை வெளிப்படுத்துகிறது.

**குறியீட்டுச் சொற்கள்:** குறுந்தொகை, வாழ்வியல் முறைகள், விருந்தோம்பல், இல்லற வாழ்வு, பண்டமாற்று முறை, தமிழர் பண்பாடு

**முன்னுரை**

மனித வாழ்வினைப் படம்பிடித்துக் காட்டும் உன்னத பணியை இலக்கியங்கள் மேற்கொண்டு வருகின்றன. இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி என்று அழைக்கலாம். இவ்வகையில் சங்க இலக்கியங்கள் முழுமையும் தமிழர்களின் ஒப்பற்ற வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளது.

சங்க இலக்கியம் செந்தமிழின் செவ்வியல் இலக்கியம் ஆகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓர் ஆயிரம் பண்பாட்டுக் களஞ்சியங்களைத் தன்னகத்தே கொண்ட தன்னிகரற்ற இலக்கியமாக சங்க இலக்கியம் திகழ்கிறது.[1] அழகு நிறைந்த நற்றிணையும், 'நல்ல' குறுந்தொகையும், ஐவகை நிலம் காட்டும் ஐங்குறுநூறு, பண்பாடு காட்டிடும் பதிற்றுப்பத்தும், ஓங்கு பரிபாடலும், கற்றறிந்தார் போற்றும் கலித்தொகையும் உறவுகளின் உன்னதத்தை உலகுக்கு உணர்த்திய உன்னத இலக்கியங்கள் ஆகும்.

கடைச்சங்க காலத்தில் உருவான தொகை நூல்களில் குறுந்தொகை அகவற்பாவால் அமைந்த ஓர் அகப்பொருள் பனுவலாகும். நல்ல குறுந்தொகை என பாராட்டப்படும் இந்நூலில் அன்பின் ஐந்திணை, முப்பொருள், இயற்கை, தமிழர் வாழ்வு போன்ற அனைத்து நிலைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.[2] நான்கடிச் சிற்றெல்லையும், எட்டடிப் பேரெல்லையும் உடைய நூலாக குறுந்தொகை அமைந்துள்ளது.

பண்டைய தமிழர்கள் காதலையும், போரையும் இரு கண்களாகப் போற்றினர். காதலால் ஒன்றான தலைவனும் தலைவியும் இல்லறத்தை நன்றாக நடத்தினார் என்பதற்கு சான்றாக இவ்விலக்கியம் திகழ்கிறது.[3] மேலும் பண்டைய கால தமிழர்களின் அக ஒழுக்காறுகளையும், புற ஒழுக்காறுகளையும், பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும் திறம்பட எடுத்தியம்பியுள்ளது. முற்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் வாழ்வியலைச் செம்மையாக இயக்கி வந்தனர். அவ்வகையில் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளை குறுந்தொகை என்ற நிலையில் எடுத்து இயம்பி வந்துள்ளது என்பதை இனம் காணும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**ஆய்வு நோக்கம்**

இக்கட்டுரையின் முதன்மை நோக்கம் குறுந்தொகை பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள தமிழர்களின் வாழ்வியல் முறைகளை எடுத்துரைப்பியல் (Anthropological) நோக்கில் ஆராய்வதாகும். குறிப்பாக, இல்லற வாழ்வு, விருந்தோம்பல் பண்பு, பண்டமாற்று முறை ஆகியவற்றின் சமூகப் பொருளியல் பரிமாணங்களை விரிவாக ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் இலக்காகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு பண்பாட்டு நூல் ஆய்வு முறையைப் பின்பற்றுகிறது. குறுந்தொகையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களின் உள்ளடக்க பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாழ்வியல் முறைகளைப் பிரதிபலிக்கும் பாடல்கள் குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் சமூகவியல் பொருள் விளக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்குத் தேவையான துணைநூல்களும் ஆய்வேடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தலைவன் தலைவி இல்லற மாண்பு**

குறுந்தொகை பாடல்களின் வழியாக தலைவன் தலைவியின் அகவாழ்வு வாழ்வியல் முறைகள் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தோழி தலைவனைப் பற்றிக் கூறுமிடத்துத் தலைவி தலைவனின் உயர்ந்த குணங்களை எடுத்துக்காட்டுவது தலைவன் மேல் கொண்ட இல்லற மாண்பினை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

அகம் என்பது தலைவன் தலைவி இடையே நிகழும் இன்ப உணர்வைக் களமாகக் கொண்டது. மனிதன் தோன்றிய காலம் தொட்டு இன்றுவரை காதல், நட்பு என்ற பண்பாடுகள் போற்றப்படுகின்றன.[4] இல்லறமானது தலைவனும், தலைவியும் கருத்தொருமித்து நடத்தக்கூடிய நல்லறமாகும்.

"மனையுறை வாழ்க்கை வள்ளியாங்கு மருவியின்
இனியவும் உளவே?"[5]

இப்பாடலில், ஐயூர் முடவனார், தலைவனோடு ஒத்து வாழக்கூடிய இல்லற வாழ்வை விட இனிமையானது வேறில்லை என்று கருதும் தலைவியின் ஊடாகச் சங்கத் தமிழரின் இல்லற மாண்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

களவு, கற்பு என்ற சொற்கள் முறையே காதல், திருமணம் என்பதையே குறிக்கின்றன. களவு மணம் புரிந்த தலைவனும் தலைவியும் தங்களது அன்பில் உறுதியாக இருக்கும் நிலையை மதுரைக் கொல்லன் புல்லனார்,

"நிலம்புடைப் பெயரினும் நீர் பிறழினும்

இலங்குதிரைப் பெருங்கடற்கு எல்லை தோன்றினும்

கேடு எவன் உடைத்தோ தோழி"[6]

என்ற பாடலில் எடுத்தியம்பியுள்ளார். இப்பாடலில் நிலம் கீழ், மேலாகப் பெயர்ந்து உலகமே அழிந்து போனாலும், நீரின் தட்பம் நெருப்பிற்கும் நெருப்பின் வெம்மை நீருக்குமாக மாறினும், பெரிய கடல் வற்றிப் போனாலும் ஒத்த தலைவன் தலைவியின் அன்பானது மாறாதது என்பதை உணர்த்துகிறார்.
தலைவி மீது தான் கொண்ட அன்பினை வெளிப்படுத்தும் தலைவனின் நிலையை சிறைக்குடி ஆந்தையார்,

"கடல்சூழ் மண்டிலம் பெறினும்

விடல் குடிலன் யான் நின்னுடை நட்பே"[7]

என்ற பாடலில் சுட்டிக்காட்டியுள்ளார். கடல் சூழ்ந்த உலகமே கிடைக்குமானாலும் தலைவியைக் கைவிடாத தலைவனின் அன்புத் திறத்தை அப்பாடல் விளக்குகிறது.

"நிலத்திலும் பெரிதே வானினும் உயர்ந்தது என்று

நீரினும் ஆற அளவின்றே"[8]

என்ற பாடலில் தலைவனோடு தலைவி கொண்ட நட்பு, மொழி, மனம், மெய் என்ற மூன்றானும் அளந்து காண்பதற்கு அரிது என்று கூறப்படுகிறது.

"செம்புலப் பெயல் நீர் போல்"[9]

பாடலில் வேறுபட்ட இரு உள்ளங்கள் ஒன்றாய்க் கலக்கும் காட்சி உணர்த்தப்படுகின்றது. நிலத்தின் இயல்புக்கேற்றவாறு நீர் தனது வண்ணத்தை மாற்றிக்கொண்டு செம்புலப் பெயல் நீராய் மாறியது போல தலைவனும், தலைவியும் பிரிக்க இயலாதவர்கள் என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது.

**விருந்தோம்புதல்: தமிழர் வாழ்வியல் முறை**

தமிழர்களின் தலைசிறந்த பண்பாக விருந்தோம்பலைக் கருதலாம். தம்மை நாடி வரும் விருந்தினரின் மனம் மகிழும்படி உணவளித்து மகிழ்வது தமிழர்களின் உயர்ந்த குணமாகும். தன் இல்லம் நாடி வருபவர்களுக்கு முகம் சுளிக்காமல் அன்புடன் உணவு வழங்கி உபசரிப்பது இல்லத்தில் உள்ள பெண்களின் குணம் என்பது அறிந்து கொள்ளலாம்.[10]

விருந்தோம்பல் வாழ்வியல் அறங்களில் ஒன்றாகப் பணிக்கப்பட்டுள்ளது. குறுந்தொகை பாடலில் புதிய விருந்தினர் வருகையை காக்கை உணர்த்துவதாகவும், அவ்விருந்தினரை எதிர்பார்த்து வரவேற்கும் குணம் கொண்டவர்களாகத் தமிழர்கள் விளங்கியதைக் காண முடிகிறது.

"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்

பல்ஆ பெயர்த நெய்யின் தொண்டி

பெருந்தோள் நெகிழ்த்த செல்வதற்க

விருந்துவர கரைத்த காக்கையது பழியே"[11]

என்ற பாடல் வழியே அறிய முடிகிறது. விருந்தோம்பல் தமிழர்கள் விரும்பி ஏற்றதைக் காண முடிகிறது.

"நெய்கனி கூறும்பூழ் காயம் ஆக"[12]

பாடலில் வரைவினை உரைத்த ஏவல் மகனுக்குக் காடைக் குழம்பு வைத்து தேனும், கனியும் தந்து சோறிடுக என்று தலைவியிடம் தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

ஏவல் மகனுக்குரிய உணவாகக் காடைக் குழம்பு கொடுத்தல் பண்டைய நாளின் வழக்கம் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. தலைவியின் துன்பத்தை நீக்க விருந்தினர் வருமாறு பல பசுக்கள் தந்து

நெய்யோடு, தொண்டி என்னும் ஊரில் உள்ள வயல்களில் பருவம் தப்பாது விளைந்த வெண்ணெல் அரிசியால் ஆக்கிய சோற்றினை ஏழு கலங்களில் இட்டுக் காக்கைக்குச் சோறிடும் மரபாக இன்றும் நடைமுறையில் உள்ளது.

**விருந்தோம்பல் பண்பு: சமூகப் பொருளாதார நோக்கு**

இல்லறக் கடமைகளுள் மிக முக்கியமான ஒரு பண்பாக விருந்தோம்பலைச் சங்கத்தமிழர் கருதினர். இல்லற வாழ்க்கையின் முதன்மை நோக்கமாக விருந்தோம்பல் கருதப்பட்டது. தலைவிக்குரிய பண்புகளைக் கூறும் தொல்காப்பியர் விருந்து பற தருதலையும், சுற்றம் ஓம்புதலையும் கூறுகிறார்.

சங்க இலக்கியத்தில் பிறருக்கு உதவுதல் பொருட்டும், விருந்தினரை உபசரிக்கும் பொருட்டும் பொருளீட்டுவதற்காகத் தலைவியைத் தலைவன் பிரிந்து செல்கிறான்.[13] விருந்தோம்பல் என்பது கணவனுடன் கூடி வாழும் மங்கள மகளிருக்குரிய தனி உரிமையாகக் கருதப்பட்டது. இதனைக் கணவனை இழந்தவர்களும், பிரிந்து வாழ்பவர்களும் விருந்தினை உபசரிக்கும் உரிமை பெறவில்லை என்று சான்று மெய்ப்பிக்கின்றது.

கணவன் அல்லது மனைவி மட்டுமே விரும்பினால் இயலாது. இருவரில் ஒருவர் மாறுபடினும் விருந்தோம்பலைச் சிறப்பாகச் செய்ய இயலாது. விருந்து போற்றும் கணவனும் மனைவியும் ஒருமித்த உணர்ச்சி உடையவராய் இருத்தல் இன்றியமையாதது. இவ்வாறு இருந்தால்தான் விருந்து நடைபெறும் இல்லத்தில் உள்ள கணவனும் மனைவியும் மனம் ஒத்து வாழ்கின்றனர் என்பது கருத்தாகும். அதாவது அவர்களது இல்வாழ்க்கை செம்மையுடன் நடைபெறுகிறது என்பது பொருளாகும்.[14]

பண்டமாற்று முறை வழக்கிலிருந்து, அக்காலத்தில் போக்குவரத்து வசதிகளும் இல்லாத சூழ்நிலை நிலவியது. எனவே இரவலர்கள் மட்டுமின்றி ஏனையோரும் ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கால்நடையாகவே நடந்து செல்ல வேண்டி இருந்தது. ஆகவே புதிதாக ஒருவருக்குப் பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் அமிர்தமாகவே இருந்தாலும் அதனை வந்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கொடுத்து விருந்து உண்டனர். சங்ககால மக்கள் அவர்கள் வறுமையில் இருந்தாலும் விருந்தோம்பலைக் கடைப்பிடித்தும் வந்துள்ளனர். விருந்தோம்பும் பண்பும் தமிழகத்தில் தோன்றியது எனலாம்.

தொல்காப்பியர் காலத்திலேயே விருந்தோம்பல் போற்றப்பட்டது என்பதைப் பின்வரும் பாடல் வழியில் அறியலாம்:

"புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விரிந்தின் பகுதாகக் கண்ணும்"[15]

இதனால் பகற்குறி இரவு கூறி நடைபெறும் இடங்களாக விருந்தோம்பலும் கூறப்பட்டுள்ளது. இல்லற மகளிரின் இன்றியமையாத பண்புகளில் ஒன்று விருந்தோம்பல். பெண்ணின் இலக்கணம் கூறும் தொல்காப்பியர் இல்லறத் தலைவியின் கடமைகளைக் கூறும் போது விருந்தோம்பல் பண்பாட்டினை இணைத்து,

"கற்பும் காமமும் நற்பகல் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறம் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோனன் மாண்புகழ்"[16]

என்று விருந்து போற்றலும், விருந்தோம்பல் பண்பினைப் போட்டிருப்பதைக் காணலாம்.

**பண்டமாற்று பண்பாடு**

சங்க காலத்தில் ஒரு பொருளுக்கு நிகராக மற்றொரு பொருள் பண்டமாற்றம் செய்யப்படும் என்பது திணை அடிப்படையில் அமையும் பண்டமாற்றம் செய்யும் வழக்கம் இருந்தது.[17] அதன் அடிப்படையில், குறுந்தொகையிலும்,

"உப்பை மாற்றி வெண்ணில் தரிஇய

உப்பு விளை கழனிச் சென்றனர்"[18]

உப்பு விற்று வெண்ணெல்லை வாங்கி வரும் பொருட்டு உப்பு விளையும் களத்திற்குச் சென்றாள் என்ற கூற்றிலிருந்து உப்பிற்கு நிகராக வெண்ணெல் பண்டமாற்றம் செய்யப்படுவதை அறிய முடிகிறது.
இவ்வாறான பண்டமாற்று முறை சங்ககாலத் தமிழர்களின் பொருளாதார அமைப்பின் அடிப்படையாக விளங்கியது. திணை வாரியாக உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் ஒன்றுக்கொன்று மாற்றப்பட்டன. மலைநாட்டின் தேன், கானவர் எடுக்கும் பல்வேறு காய்கறிகள், கடல் நாட்டின் மீன், உப்பு ஆகியவை மருதநிலத்தின் நெல், உழவர்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்கள் ஆகியவற்றுக்கு மாற்றாக வழங்கப்பட்டன.

வறுமையிலும் வாழ்வியல் முறை உலகில் வறுமையிற்றோருக்கு வளமான வாழ்வு இல்லை. தம்மைச் சூழ்ந்துள்ள சுற்றத்தைப் பாதுகாத்தும், தாம் விரும்புவர்களோடு கூடி இனிதாக மகிழ்ந்து வாழும் வாழ்க்கை இவர்களுக்கு வாய்ப்பதில்லை.[19] புறநானூறு, அகநானூறு, நற்றிணை போன்ற நூல்களில் வறுமையில் வாழ்ந்தும் நேர்மை, பண்பு, பெருமை இழக்காத மனிதர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.
வறுமை இருந்தாலும் அறநெறியைக் காக்கும் வாழ்க்கை முறை உயர்ந்தது என்று குறிப்பிடப்படுகிறது. எல்லோருக்கும் இன்பம் துய்த்தலும் கைவிடுவதில்லை. இளமையில் வறுமை இன்னும் கொடியதாகும். வறியவர்களுடைய இல்வாழ்க்கை பசிப்பதையும் விட இழிநிலை உடையதாக இருந்துள்ளது.[20]
அறவழியில் வாழ்க்கை உயர்ந்தோரின் வாழ்க்கை முறையானது செயல்கள் எப்பொழுதும் அறத்தொடு பொருந்தியதாகவே இருந்துள்ளன.

"எழில் மிகு உடையது ஈங்கு அணிப்படுஉம் திரவோர் செய்வினை அறவது ஆகும்"[21]

என்ற குறுந்தொகைப் பாடல் நற்செய்கையினைப் பாராட்டி உரைக்கிறது. ஒரு செயலை அறவழியில் நின்று திருத்தும் முறையில் முடிப்பது என்பது யாவருக்கும் பயன் விளைவிப்பதாகும். இச்செயல் வடிவிலான பயன்பாடுகள் பற்றி பழந்தமிழ் இலக்கியங்களில் மிகச்சிறப்பாகப் பேசப்படுகின்றன.
சங்ககால மக்கள் அறநெறியைக் கடைபிடித்து வாழ்ந்தனர். வறுமையில் இருந்தாலும் நேர்மையான வழியில் வாழ்வதையே முதன்மையாகக் கருதினர். அறத்தோடு பொருந்திய செயல்கள் சமூகத்தின் ஒழுக்க அடிப்படையை வலுப்படுத்தின.

ஈதலும் வாழ்வும் இல்லறத்திற்கு நாள்தோறும் இரவலர் பலர் வந்து உதவி பெற்றுப் போவது பெருமையாகவும், அவர்கள் வராமல் இருப்பது வாழ்க்கையின் சிறுமையாகவும் கருதப்பட்டு வந்தன.[22]
உன்னைப் பிரிய மாட்டேன் என்ற தலைவிக்கு அறிவுறுத்தும் தலைவன் கூறும் உறுதிமொழி (வஞ்சினம்) போல் அமைந்துள்ளது. உன்னை விட்டுப் பிரிந்தால் யான் மேற்கொள்ளும் கடமையுடன் வாழும் வாழ்வில் இரவலர் என்னை விட்டு நீங்க வராமல் நிற்கும் நாட்கள் பல ஆகுக என்கிறான்.

"இரவலர் வாரா வைகள் பல ஆகுக யான் செலவு உறுதவே"[23]

என்கிறது குறுந்தொகை. பிறர் துன்பத்திற்கு இரங்கும் மனமுடைய சான்றோர் பொருளைப் பாதுகாவாது, தம்மிடம் உள்ளதை எல்லோருக்கும் வழங்கும் இயல்புடையவர் ஆவார்.

"நல் இசை வேட்ட நயன் உடை நெஞ்சின் கடப்பாட்டாளன் உடைப்பொருள் போலத் தங்குதற்கு

உரியது அன்று நின் அம் கலுழ் மேனிப் பாஅய் வசப்பே"[24]

இதிலிருந்து சங்ககால மக்களிடையே இருந்த ஈகைப் பண்பும் இரக்க குணமும் வெளிப்படுகிறது. உயர்ந்த உள்ளம் கொண்ட செல்வக் குடியில் பிறந்தவர்கள் தன்னை நாடி வந்தவர்களுக்கு நீரோடு பொன்னைச் சேர்த்து தானமாக வழங்குவார்கள். தானம் கொடுத்து மீதம் இருப்பதைத் தான் மட்டும் நுகராமல் யாவருக்கும் விருப்பத்தோடு கொடுத்து உதவினர்.[25]

நம்பிக்கையே வாழ்க்கை "புனவன் துடவைப் பொன்போல் சிறுதிணை"[26]

என்ற பாடலில் கிளி உண்டதால் துண்டாகி நின்ற திணைப் பயிர் மழையில் தலைத்தால் போல, தன் தலைவன் தன்னை மணந்தால் தான் மீண்டும் உயிர் பெறுவேன், இழந்த நலனையும் பெறுவேன் என்பது தலைவி கூற்று. வலிமை நீங்கிய போதிலும் சாகாமல் இன்னும் உயிரோடு இருப்பதற்குக் காரணம் நம்பிக்கையே வாழ்க்கைக்கு அடிப்படை என்பதை உணர்த்துவதற்காகத் தான் என்கிறாள் தலைவி.

"விடர்முகை படுக்கத்து வறல் கெழு சூலிக்குக் கடனும் பூணாங் கைநூல் யாவாம் புள்ளு மோரம்

விருச்சியு நில்லாம்"[27]

என்ற பாடலானது உணர்த்துகிறது. இது தமிழரின் பண்பாட்டு அமைவினைக் காட்டுவதாக அமைகிறது. தமிழர் வாழ்வியலில் இடம்பெற்றிருந்த பல்வகை நம்பிக்கைகளையும் எடுத்துக் கூறுவதாக மேற்கண்ட பாடல் அடிகள் அமைகின்றன.

சங்ககால மக்கள் வாழ்வில் நம்பிக்கை மிக முக்கிய இடம் வகித்தது. கடினமான சூழ்நிலைகளில் கூட நம்பிக்கையோடு வாழ்ந்தனர். இயற்கை சார்ந்த நம்பிக்கைகள், தெய்வ நம்பிக்கைகள், சகுன சாஸ்திரம் சார்ந்த நம்பிக்கைகள் என பல்வேறு நம்பிக்கைகள் அவர்களது வாழ்வை வழிநடத்தின.[28]

வேலன் வெறியாடல் தலைவன் மீது காதல் கொண்ட தலைவி தன்னை இயல்பு நிலையிலிருந்து வேறுபட்டு பித்தி பிடித்தவள் போல காணப்படுவாள். தலைவியின் இந்நிலை கண்ட நற்றாய், தன் மகள் அழகின் பிடியில் சிக்கினால் போலும் என எண்ணினாள்.[29] வேலன் என்பது பூசாரியைக் குறிக்கும். வேலன் தன் மீது முருகன் இறங்கியதாகக் கூறி ஆரவாரத்துடன் வாழை இலையில் நெல் பரப்பி, அதில் தலைவி ஆசையுடன் வளர்த்த ஆட்டுக்குட்டியின் தலையை வெட்டிப் பலியிட முற்படுவான். அச்சமயம் தலைவி தம் கனவை வெளிப்படுத்தி அவ்வாட்டுக்குட்டியை மீட்டுக் கொள்வாள். இவ்வேலன் வெறியாடலை,

"மறிகுர லறுத்துத் திணைப் பிரப் பிரீஇச் செல்லாற்றுக் கவலை பல்லியுங் கறங்கத் தோற்ற மல்லது

நோய்க்கு மருந்து ஆகாது எய்வம் பலவுடன் வாழ்த்தி"[30]

என்ற பாடலானது எடுத்து இயம்புகிறது. வேலன் வெறியாடல் என்பது இசைக்கருவிகளை முழக்குதல், தெய்வத்தை வாழ்த்தல் போன்ற நிகழ்வுகளையும் அரங்கேற்றுகிறது. இவ்வழக்கம் இன்றும் நாட்டுப்புற மக்களிடையே "குறிகேட்டல்" என்ற முறையில் இன்றும் வழங்கப்படுகிறது.

வேலன் வெறியாடல் சங்ககால தமிழர்களின் மத நம்பிக்கைகளையும், சடங்குகளையும் வெளிப்படுத்துகிறது. இது நாட்டுப்புற மருத்துவ முறையின் ஒரு பகுதியாகவும் செயல்பட்டது. மனநோய்களுக்கு சிகிச்சையாக இம்முறை கருதப்பட்டது.[31]

**முடிவுரை**

குறுந்தொகை என்ற அகப்பொருள் நூல் தமிழர்களின் வாழ்வியல் முறைகளை விரிவாகப் பதிவு செய்துள்ளது என்பதை இவ்வாய்வின் வழியாக அறிய முடிகிறது. தலைவன் தலைவியின் இல்லற மாண்பு, விருந்தோம்பல் பண்பு, பண்டமாற்று முறை போன்ற பல்வேறு சமூக, பொருளாதார நடைமுறைகள் குறுந்தொகைப் பாடல்களில் எடுத்துரைப்பியல் ரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தலைவன் தலைவியின் அன்பு நிலையற்ற உலகத்தை விட நிலையானது என்ற கருத்து பல பாடல்களில் வலியுறுத்தப்படுகிறது. இல்லற வாழ்வின் முக்கியத்துவமும், கணவன் மனைவி இருவரும் ஒருமித்த உணர்வுடன் வாழ்வதன் அவசியமும் தெளிவாக எடுத்துரைக்கப்படுகின்றன.

விருந்தோம்பல் என்பது வெறும் உணவு வழங்கும் செயல் மட்டுமல்ல, மாறாக அது தமிழர்களின் சமூக ஒழுங்கமைப்பின் முக்கிய அங்கமாக விளங்கியது. இல்லறத்தின் முதன்மைக் கடமைகளில் ஒன்றாக விருந்தோம்பல் கருதப்பட்டது. காக்கைக்குச் சோறிடுதல், ஏவலருக்கு உணவளித்தல் போன்ற வழக்கங்கள் விருந்தோம்பல் பண்பாட்டின் பல்வேறு வெளிப்பாடுகளாகும்.

பண்டமாற்று முறை சங்ககால தமிழர்களின் பொருளாதார அமைப்பின் அடித்தளமாக இருந்தது. திணை வாரியாக உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் பரிமாறப்பட்டன. இம்முறை சமூக ஒருமைப்பாட்டையும், பல்வேறு நிலப்பகுதிகளுக்கு இடையேயான தொடர்பையும் வலுப்படுத்தியது.

இவ்வாறு குறுந்தொகை தமிழர்களின் வாழ்வியல் முறைகளைப் பதிவு செய்யும் முக்கியமான ஆவணமாகத் திகழ்கிறது. இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வை எடுத்துரைப்பியல் நோக்கில் புரிந்து கொள்ள குறுந்தொகை சிறந்த மூலமாக அமைகிறது. தமிழ் இலக்கியங்கள் வெறும் கற்பனை படைப்புகள் மட்டுமல்ல, மாறாக அவை தமிழர்களின் வரலாற்று வாழ்வை எடுத்துரைக்கும் நம்பகமான ஆவணங்கள் என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சங்க இலக்கியம் கி.பி 100 முதல் 250 வரையிலான காலப்பகுதியில் உருவானது என்பது அறிஞர்களின் பொதுவான கருத்தாகும்.
2. குறுந்தொகை 400 பாடல்களைக் கொண்ட தொகுப்பாகும். இது நான்கு முதல் எட்டு அடிகள் வரை உடைய பாடல்களால் ஆனது.
3. பா. 322, குறுந்தொகை, ப. 322.
4. தமிழ் இலக்கியத்தில் காதல் என்பது புணர்தலோடு மட்டும் முடிவடைவதில்லை; மாறாக அது இல்லற வாழ்வின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.
5. குறுந்தொகை, பா. 322, ப. 322.
6. குறுந்தொகை, பா. 373, ப. 341.
7. குறுந்தொகை, பா. 300, ப. 292.
8. குறுந்தொகை, பா. 3, ப. 10.
9. குறுந்தொகை, பா. 40, ப. 67.
10. ரா. காயத்ரி, நாட்டுப்புறக் கதைகளில் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்கள், சென்னை, 2015, ப. 78.
11. குறுந்தொகை, பா. 210, ப. 225.
12. குறுந்தொகை, பா. 389, ப. 351.
13. அகப்பொருள் இலக்கியத்தில் தலைவன் பொருள் தேடிச் செல்தல் என்பது ஐந்து வகைப்படும்: விருந்தோம்புதல், ஈகை, கல்வி, அரசுத்தொழில், நாடு காத்தல்.
14. இல்லற வாழ்வில் கணவன் மனைவி இருவரின் ஒத்துழைப்பு அவசியம் என்பது தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியம் வரை வலியுறுத்தப்படுகிறது.
15. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சூ. 65.
16. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சூ. 117, ப. 154.

17. பண்டமாற்று முறை உலகின் பல்வேறு பண்டைய நாகரிகங்களில் காணப்படுகிறது. இது நாணயம் தோன்றுவதற்கு முந்தைய பொருளாதார முறையாகும்.
18. குறுந்தொகை, பா. 269, ப. 269.

**அடிக்குறிப்புகள்**

1. சங்க இலக்கியம் கி.பி 100 முதல் 250 வரையிலான காலப்பகுதியில் உருவானது என்பது அறிஞர்களின் பொதுவான கருத்தாகும்.
2. குறுந்தொகை 400 பாடல்களைக் கொண்ட தொகுப்பாகும். இது நான்கு முதல் எட்டு அடிகள் வரை உடைய பாடல்களால் ஆனது.
3. பா. 322, குறுந்தொகை, ப. 322.
4. தமிழ் இலக்கியத்தில் காதல் என்பது புணர்தலோடு மட்டும் முடிவடைவதில்லை; மாறாக அது இல்லற வாழ்வின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.
5. குறுந்தொகை, பா. 322, ப. 322.
6. குறுந்தொகை, பா. 373, ப. 341.
7. குறுந்தொகை, பா. 300, ப. 292.
8. குறுந்தொகை, பா. 3, ப. 10.
9. குறுந்தொகை, பா. 40, ப. 67.
10. ரா. காயத்ரி, நாட்டுப்புறக் கதைகளில் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்கள், சென்னை, 2015, ப. 78.
11. குறுந்தொகை, பா. 210, ப. 225.
12. குறுந்தொகை, பா. 389, ப. 351.
13. அகப்பொருள் இலக்கியத்தில் தலைவன் பொருள் தேடிச் செல்தல் என்பது ஐந்து வகைப்படும்: விருந்தோம்புதல், ஈகை, கல்வி, அரசுத்தொழில், நாடு காத்தல்.
14. இல்லற வாழ்வில் கணவன் மனைவி இருவரின் ஒத்துழைப்பு அவசியம் என்பது தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியம் வரை வலியுறுத்தப்படுகிறது.
15. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சூ. 65.
16. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சூ. 117, ப. 154.
17. பண்டமாற்று முறை உலகின் பல்வேறு பண்டைய நாகரிகங்களில் காணப்படுகிறது. இது நாணயம் தோன்றுவதற்கு முந்தைய பொருளாதார முறையாகும்.
18. குறுந்தொகை, பா. 269, ப. 269.
19. சங்க இலக்கியங்களில் சமூக வர்க்க வேறுபாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அனைத்து வர்க்கத்தினரும் அறநெறியைப் போற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.
20. வறுமையின் கொடுமை பற்றிய விவரங்கள் சங்க இலக்கியத்தின் பல பகுதிகளில் காணப்படுகின்றன.
21. குறுந்தொகை, பா. 247, ப. 252.
22. இரவலர்கள் என்பவர் வறுமையால் பிறரிடம் பொருள் கேட்டு வாழ்பவர்களைக் குறிக்கும். அவர்களுக்கு உதவுதல் இல்லற கடமையாகக் கருதப்பட்டது.
23. குறுந்தொகை, பா. 137, ப. 170.
24. குறுந்தொகை, பா. 143, ப. 176.
25. ஈகைப் பண்பு சங்க இலக்கியத்தில் மிக உயர்ந்த பண்பாகப் போற்றப்பட்டது. குறிப்பாக வள்ளல்கள் இப்பண்பிற்காகப் புகழப்பட்டனர்.
26. குறுந்தொகை, பா. 133, ப. 167.
27. குறுந்தொகை, பா. 210, ப. 231.

Tamilmanam

28. சங்ககால தமிழர்களின் நம்பிக்கை முறைகள் இயற்கை வழிபாடு, தெய்வ வழிபாடு, சடங்குகள் என பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டன.
29. காதல் நோயை ஆற்ற வேலன் வெறியாடல் நடத்தப்படுவது சங்ககால மருத்துவ முறையின் ஒரு பகுதியாகும்.
30. குறுந்தொகை, பா. 263, ப. 264.
31. வேலன் வெறியாடல் தமிழகத்தில் இன்றும் சில பகுதிகளில் நடைமுறையில் உள்ளது. இது நாட்டுப்புற மருத்துவத்தின் தொடர்ச்சியாகும்.
32. சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவியின் உறவு வெறும் காமம் மட்டுமல்ல, அன்பு, புரிதல், விட்டுக்கொடுத்தல் போன்ற பண்புகளை அடிப்படையாகக் கொண்டது.

**குறிப்புப்பட்டியல் / References**

**முதன்நூல்கள் / Primary Sources**


1. **குறுந்தொகை.** உ.வே. சாமிநாதையர், பதிப்பு. சென்னை: கபீர் அச்சகம், 1955.
2. **தொல்காப்பியம் - பொருளதிகாரம்.** இளம்பூரணர் உரை. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1965.
3. **புறநானூறு.** உ.வே. சாமிநாதையர், பதிப்பு. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1963.
4. **அகநானூறு.** உ.வே. சாமிநாதையர், பதிப்பு. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1965.
5. **நற்றிணை.** உ.வே. சாமிநாதையர், பதிப்பு. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1956.
6. துணைநூல்கள் / Secondary Sources
7. அரங்கன், திருமாளிகை சௌரிபெருமாள். **குறுந்தொகை ஆய்வு.** சென்னை: முல்லை நிலையம், 9 பாரதி நகர் முதல் தெரு, தி நகர், 2005.
8. அரவிந்தன், முனைவர் இரா. **சங்க இலக்கியம் உரை வேறுபாட்டுக் களஞ்சியம்.** சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பி லிட் சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 2010.
9. இராசநாயகம், பா. **சங்க காலத் தமிழர் வாழ்வு.** சென்னை: பாரதி புத்தகாலயம், 2001.
10. இராசமாணிக்கனார், மா. **பண்டைத் தமிழர் வாழ்க்கையும் பண்பாடும்.** சென்னை: காவ்யா பதிப்பகம், 1990.
11. இராசமாணிக்கனார், முனைவர் மா. **கலித்தொகை.** சென்னை: பூம்புகார் பதிப்பகம், 127 பிரகாசம் சாலை, பிராட்வே, 1998.
12. இலக்குவனார், சி. **தொல்காப்பியம் - பொருளதிகாரம் மூலமும் உரையும்.** சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 1963.
13. கா. அப்பாத்துரை. **சங்க இலக்கியத்தில் வாழ்வியல் முறைகள்.** மதுரை: மீனாட்சி புத்தகாலயம், 2005.
14. காயத்ரி, ரா. **நாட்டுப்புறக் கதைகளில் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்கள்.** சென்னை: மெய்யப்பன் பதிப்பகம், 2015.
15. ---. "நாட்டுப்புறக் கதைகளில் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்கள்." **தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்.** தொகுதி 8, எண் 1, ஜூலை 2025, பக். 65-82.
16. கேசிகன், புலியூர். **சங்க இலக்கிய ஆய்வுகள்.** சென்னை: ஜீவா பதிப்பகம், புதிய எண் 8, சீனிவாசன் தெரு, தி நகர், 2008.
17. சண்முகம் பிள்ளை, ம. **சங்க இலக்கிய வரலாறு.** சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1999.
18. சுப்ரமணியன், என். **சங்க இலக்கிய ஆய்வுகள்.** சென்னை: பாரி நிலையம், 2008.

19. சோமசுந்தரனார், பெருமழைப்புலவர் பொ.வே. **குறுந்தொகை மூலமும் உரையும்.** திருநெல்வேலி: தென்னிந்திய சைவ சித்தாந்தம் பதிப்பு கழகம், 52 டி.கே.சி சாலை, சென்னை, 1975.
20. செல்லப்பன், முனைவர். **குறுந்தொகை ஆராய்ச்சி.** தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1998.
21. நாகசாமி, இரா. **தமிழர் நாகரிகமும் கலாச்சாரமும்.** சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010.
22. நாகராசன், வி. **சங்க இலக்கியம் மூலமும் உரையும்.** சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 2012.
23. வையாபுரி பிள்ளை, ஸ்ரீ எஸ். **தமிழ் இலக்கிய வரலாறு: பண்டைய காலம்.** சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 9 பாரதி நகர் முதல் தெரு, தி நகர், 2007.
24. ஆய்விதழ்கள் / Journal Articles
25. அருணாசலம், முனைவர் மு. "குறுந்தொகையில் இல்லற வாழ்வு." **தமிழ் இலக்கிய ஆய்வு.** தொகுதி 15, எண் 2, 2012, பக். 45-58.
26. சுந்தரம், டாக்டர் வ. "சங்க கால விருந்தோம்பல் பண்பாடு." **பண்பாட்டு ஆய்வுகள்.** தொகுதி 8, எண் 1, 2015, பக். 112-125.
27. ராஜேந்திரன், முனைவர் பா. "பண்டைய தமிழகத்தில் பண்டமாற்று முறை." **வரலாற்று ஆய்வுகள்.** தொகுதி 22, எண் 3, 2010, பக். 78-92.
28. வேலாயுதம், முனைவர் சி. "சங்க இலக்கியத்தில் ஈகைப் பண்பு." **தமிழ் ஆய்வு மலர்.** தொகுதி 12, எண் 4, 2018, பக். 34-47.
29. இணையதள மூலங்கள் / Web Resources
30. "Kuruntokai - Classical Tamil Literature." **Project Madurai.** www.projectmadurai.org, அணுகப்பட்ட தேதி: 15 செப்டம்பர் 2024.
31. "Sangam Literature and Tamil Culture." **Tamil Virtual Academy.** www.tamilvu.org, அணுகப்பட்ட தேதி: 20 செப்டம்பர் 2024.
32. Here is the English translation of the bibliography:

**Primary Sources**

1. Kuruntokai. Edited by U.Ve. Saminathaiyar. Chennai: Kabir Press, 1955.
2. Tolkappiyam - Poruladhikaram. With Ilampuranar's Commentary. Chennai: University of Madras, 1965.
3. Purananuru. Edited by U.Ve. Saminathaiyar. Chennai: University of Madras, 1963.
4. Akananuru. Edited by U.Ve. Saminathaiyar. Chennai: University of Madras, 1965.
5. Natrinai. Edited by U.Ve. Saminathaiyar. Chennai: University of Madras, 1956.
6. **Secondary Sources**
7. Arangan, Thirumaligai Sauriperumaal. Kuruntokai Aayvu (Study of Kuruntokai). Chennai: Mullai Nilayam, 9 Bharathi Nagar First Street, T. Nagar, 2005.
8. Aravindhan, Dr. Ra. Sangam Ilakkiyam Urai Verupattu Kalanchiyam (Treasury of Commentary Variations in Sangam Literature). Chennai: New Century Book House, P Ltd., Sidco Industrial Estate, Ambattur, 2010.

9. Rajanayakam, Pa. Sangam Kaala Thamizhar Vazhvu (Life of Sangam Age Tamils). Chennai: Bharathi Library, 2001.
10. Rasamanicknar, Ma. Pandaiya Thamizhar Vaazhkaiyum Panpadum (Life and Culture of Ancient Tamils). Chennai: Kavya Publishers, 1990.
11. Rasamanicknar, Dr. Ma. Kalithokai. Chennai: Poompuhar Publishers, 127 Prakasam Road, Broadway, 1998.
12. Ilakkuvanar, C. Tolkappiyam - Poruladhikaram Moolamum Uraiyum (Tolkappiyam - Poruladhikaram: Text and Commentary). Chennai: Manivaasakar Publishers, 1963.
13. Ka. Appathurai. Sangam Ilakkiyathil Vaazhviyal Muraigal (Lifestyle Practices in Sangam Literature). Madurai: Meenakshi Library, 2005.
14. Gayathri, Ra. Nattupura Kathaikalil Panpattu Vaazhviyal Vizhumiyangal (Cultural and Lifestyle Values in Folk Tales). Chennai: Meyyappan Publishers, 2015.
15. ---. "Nattupura Kathaikalil Panpattu Vaazhviyal Vizhumiyangal" (Cultural and Lifestyle Values in Folk Tales). Tamil Mozhi Matrum Ilakkiya Pannattu Aayvithazh (Tamil Language and Literature International Research Journal). Vol. 8, No. 1, July 2025, pp. 65-82.
16. Kesikan, Puliyoor. Sangam Ilakkiya Aayvugal (Studies in Sangam Literature). Chennai: Jeeva Publishers, New No. 8, Srinivasan Street, T. Nagar, 2008.
17. Shanmugam Pillai, M. Sangam Ilakkiya Varalaru (History of Sangam Literature). Chennai: University of Madras, 1999.
18. Subramaniyan, N. Sangam Ilakkiya Aayvugal (Studies in Sangam Literature). Chennai: Paari Nilayam, 2008.
19. Somasundaranar, Perumazhaippulavar Po.Ve. Kuruntokai Moolamum Uraiyum (Kuruntokai: Text and Commentary). Tirunelveli: South Indian Saiva Siddhanta Publishing House, 52 T.K.C. Road, Chennai, 1975.
20. Sellappan, Dr. Kuruntokai Aaraichi (Research on Kuruntokai). Thanjavur: University of Madras, 1998.
21. Nagasamy, Ra. Thamizhar Naagarigamum Kalaasaaramum (Tamil Civilization and Culture). Chennai: New Century Book House, 2010.
22. Nagarasan, V. Sangam Ilakkiyam Moolamum Uraiyum (Sangam Literature: Text and Commentary). Chennai: New Century Book House, 41 P, Sidco Industrial Estate, Ambattur, 2012.
23. Vaiyapuri Pillai, Sri S. Tamil Ilakkiya Varalaru: Pandaiya Kaalam (History of Tamil Literature: Ancient Period). Chennai: New Century Book House, 9 Bharathi Nagar First Street, T. Nagar, 2007.
24. ஆங்கில நூல்கள் / English Sources
25. Hart, George L. **The Poems of Ancient Tamil: Their Milieu and Their Sanskrit Counterparts.** Berkeley: University of California Press, 1975.
26. Ramanujan, A.K. **Poems of Love and War: From the Eight Anthologies and the Ten Long Poems of Classical Tamil.** New York: Columbia University Press, 1985.


Tamilmanam

27. Selby, Martha Ann. **Tamil Love Poetry: The Five Hundred Short Poems of the Aiṅkuṟunūṟu.** New York: Columbia University Press, 2011.
28. Zvelebil, Kamil. **Tamil Literature.** Leiden: Brill, 1975.
29. ---. **The Smile of Murugan: On Tamil Literature of South India.** Leiden: Brill, 1973.

**ஒப்புதல் / Acknowledgement**

இவ்வாய்வுக் கட்டுரை எனது முனைவர் பட்ட ஆய்வின் ஒரு பகுதியாகும். எனது ஆய்வு வழிகாட்டியான முனைவர் சி. சுப்ரமணியம் அவர்களுக்கும், கந்தசாமிக் கண்டர் கல்லூரி நிர்வாகத்திற்கும், பெரியார் பல்கலைக்கழகத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

கருத்து வேற்றுமை / Conflict of Interest

இவ்வாய்வுக் கட்டுரையில் எவ்வித கருத்து வேற்றுமையும் இல்லை.

---

நிதி உதவி / Funding

இவ்வாய்வுக்கு எவ்வித நிதி உதவியும் பெறப்படவில்லை.

Tamilmanam